உ

சிவமயம்



யாழ்ப்பாணம்

வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்றைச் சேர்ந்த

துன்னையம்பதி வாசரும்

உயர்தவச் சைவ வேளாண்குல திலகரும்

அமரத்துவமடைந்த

திரு. வேலுப்பிள்ளை திருமதி. செல்லம்மா

தம்பதியரின் அருந்தவப் புதல்வனும்

குடவத்தை விநாயகராலயம், குடமியன் ஆதிவைரவர்

கோவில் தர்மகர்த்தா சபைத் தலைவராகக்

கடமையாற்றியவரும்

கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி

ஓய்வு பெற்றவருமான

# திருவாளர் நடராசா

அவர்களது பிரிவு குறித்த

# நினைவு மலர்


22-01-1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறி நடந்து

அரனடி அடைந்த



# அமரர். வேலுப்பிள்ளை நடராசா

(ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர்)

மண்ணில்: 10-11-1916 விண்ணில்: 23-12-1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரந்து பணிந்த இறைய்டி பராவல்

## குடவத்தை பிள்ளையார்

இன்பமெங் கேயென எண்ணித் தவித்திட இன்னடியாம்
நின்பதம் தானே நிசமெனக் கண்டு நிதம்பணிந்தேன்
அன்பினின் உற்றே குடவத்தைக் கோயில் அமாந்தவனே
பின்பெது வேண்டுவன் வேண்டிய பேற்றினை வைக்குதியே.

சின்ன வயதுதொட் டிந்நாள் வரைக்கும் சிரம்பணிந்து
மின்னு மழகிய நின்னெழிற் தோற்ற மிளிர்வடைந்து
இன்னல் உலகத் துறவினை விட்டேன் இறையவனே
என்னை அழைக்குதி ஏற்றம் கொடுக்குதி ஏத்தினனே.

## கொட்டுக்குளிப்பான் பிள்ளையார்

பட்டுத் தொலைத்த பழவினைந் போகம் பெரிதலுத்தேன்
கொட்டுக் குளிப்பான் திருத்தளி கொண்ட கயமுகனே
விட்டுத் தொலைத்திட எண்ணின னுன்னடி வேண்டுகிறேன்
எட்ட விலகுவை யோஅடி ஈந்தே எனக்கருளே.

நல்வித்தை யாவெணக் கற்றவ ரேத்தும் நலம்மலிந்த
கல்வித் துறைக்கே களிப்புட னேபணி கண்டஎன்னை
சொல்லிற் பனமறி யும்புல வோர்புகழ் தேவவுன்னை
நல்லற் புதவடிப் பேறளி என்றேன் நயந்தருளே.

## குலதெய்வம் பெரியதம்பிரான்

சேருமிரு கையிணையச் செய்தேனே தொண்டங்கே
நேரிலுனை நெஞ்சார நான்நினைந்து - பாருறவை
விட்டங்கு வந்துன்தன் வண்ணஅடி சார்ந்திடவே
கிட்டுமருள் கேட்டேன் கொடு.

உற்றதொரு துன்பமெனில் உன்பாதம் தான்பணிய
அற்றொழிந்து போதல் அருங்கொடையே - குற்றமெது
செய்துளனேல் நீதவிர்த்துக் கொள்வாய் அறிவேனே
பெய்தருள்க நின்கருணைப் பேறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடமியன் ஆதிவைரவர்

ஞாலம் தனில்நினையா நாளுண்டோ என்னிறைவா
சூலம் படையாகக் கொண்டவனே - காலம்
முடிந்ததுந்தன் காணரிய பொற்பாதம் தன்னை
அடைந்துயரச் செய்வாய் அருள்.

நெஞ்சுருகக் கண்பனிப்ப நின்றங்கே வேண்டிலனோ
அஞ்சும் நிலைதவிர்த்தே ஆளென்றேன் - துஞ்சிடுநாள்
நோக்கி இரக்கின்றேன் சூல வயிரவரே
காக்க அழையிக் கணம்.

## குடமியன் சடைவைரவர்

நெற்றியிலே நீறணிய நீங்கும் பிணிகளெல்லாம்
உற்றயலே வந்தால் உயரின்பம் - பெற்றிடுவோம்
சீரார் குடமியனிற் தெய்வமே வைரவரே
தாரராய் அமப்பேறு தான்.

## இலந்தைத்தாழ்வு வைரவர்

போற்றுதல் உன்தன் பாதம் புரிவது நினது தொண்டு
ஆற்றுதல் அறமே என்று கருதியே வாழ்கின் றேன்நான்
காற்றமர் தேக வாழ்வு கருதிட வில்லைப் பாதம்
ஏற்றிட வருவே னுன்தன் இன்னருள் பாலிப் பாயே.

## வல்லிபுர ஆழ்வார்

பொய்யும் களவும் புரிந்திலனே பொழுதெல்லாமுன் கோயிலிலே
கையுந் தலைமேற் கொண்டேத்திக் கண்ணா என்றே கூப்பிட்
டேன்
பெய்யும் அருளை என்மேலே பெய்ய என்ன தாமதமோ
ஐயன் கிருஷ்ணா கோபாலா அடிசார் பேறு காட்டுதியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபச் செய்தி

மெலிந்த உடலும், எளிமைத் தோற்றமும், தெளிந்த ஞானமும், நிர்வாகத் திறனும் ஒருங்குசேரப் பெற்ற மகான். பின்தங்கிய எமது மன்னார் மாவட்டக் கல்விக்கூடங்களை வளப்படுத்தி குறிப்பாக எமது முஸ்லிம் சிறார்களின் கல்விக் கண்களைத் திறந்த அனைவருக்குமே முன்னோடி. சகல இன மக்கள் மனத்திலும் வீற்றிருக்கும் கண்ணியமான சேவையாளன் கடந்த 23 – 12 – 1996 இல் சிவபதமடைந்த எங்கள் அன்புக்குப் பாத்திரமான வேலுப்பிள்ளை நடராசா ஐயா அவர்களின் ஆத்மசாந்திக் கிரியையும் வீட்டுக்கிரியையும் நடைபெறும். இன்று [1997 ஜனவரி 22] ஐயா அவர்களின் சுற்றத்தோடு சேர்ந்து நாங்களும் பிரார்த்திக்கின்றோம்.

01 – 10 - 1966 தொடக்கம் 21 - 06 - 1970 வரை மன்னாரில் பணிப்பாளராகச் சேவையாற்றி, மக்களதும் அரசினதும் நோக்கத்தைச் சிறப்புற நிறைவேற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றும் எமக்கு, மத்திய அமைச்சிலிருந்து அவ்வப்போதெல்லாம் எம்மூருக்காக உதவி வந்துள்ளார். அன்னாரின் இழப்புச் செய்தி, இலங்கையெங்கும் பரந்து வாழும் மன்னார் மாவட்டத்தின் முஸ்லிம் களாகிய அனைவரும் கேட்டுத் திடுக்குற்றனர் றென்றால், நடராசாஐயா அவர்களின் சேவைக்கான செஞ்சோற்றுக் கடனால்தான் அது எனில் மிகையாகாது.

ஐயா அவர்களின் பிரிவால் வாடும் அவரது சுற்றத்தாருக்கு மனோவலிமையையும் மறைந்த மகானுக்கு சுவனபதியையும் கொடுக்க எல்லாம் வல்ல இறைவனை நாம் இறைஞ்சுகின்றோம்.

**"கல்விக்கு உயிர் தந்தோர் என்றும் மரணிப்பதில்லை"**

— திரு நபி மொழி

மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
கொழும்பு - 7
1997 - 01 - 10

மன்னார் முஸ்லிம் மக்களின்
சார்பாக
**கே. மொஹமட் வஸீர்**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுதாபச் செய்தி

திணைக்களம், கல்வி செயற்பாடுகளை ஒழுங்கமைத்து நிர்வகிக்கும் தலைசிறந்த நிர்வாகிகளுள் ஒருவரென விதந்துரைக்கும் நல்லாசிரிய சமூகத்தின் மதிப்பைப் பெற்றவர் அமரர் நடராசா ஆவர். திணைக்கள எழுதுனைருராக அரச பணியில் புகுந்து ஆசிரியத் தொழிலில் அமர்ந்து அதன் வளர்ச்சிப் பாதை பதவிகளில் தவழ்ந்து கல்விப் பணிப்பாளரராக திகழ்ந்து விளங்க அவர் தம் முயற்சித் திருவினையே உதவியது. கடமையை கட்டுப்பாட்டுடன் கண்ணியமாக ஆற்றி வந்தமை அன்னாரது வளர்ச்சிக்கும் புகழுக்கும் ஊன்றுகோளாகின. நெறி பிறாழாத பண்பாளனாக பணியாற்றுவதனை அறிந்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆசிரியர்களின் நல உரிமைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆலோசனை கோரி அணுகும் காலங்களில் சட்டம், ஒழுங்கு என்பனவற்றைத் தெளிவுபடுத்தி கோரிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கான வழிவகைகளை வகுத்து உதவினாரென்றால் அவர் தம் பண்பு சொல்லும் தரத்தன்று. பணியிலிருந்து இளைப்பாறிய பின்பும் சங்கம் நெறி பிறழாது வீறுநடை போட வழி நடத்திய பெருமை அமரரைச் சார்ந்ததே. அத்துணை சிறந்த நிர்வாகி இறைபதமமர்ந்து தொண்டாற்ற நல்லருள் பாலிப்பாய் என அம்பலத்தடியை வழுத்துகின்றனம்.

அன்னாரது பிரிவு ஆற்றாது துயருறும் குடும்பத்தார்க்கு சங்கம் தனது ஆழ்ந்த அனுதாபத்தை நல்கி நிற்கின்றது.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சொ. நடராசா**
முன்னைநாள் உடுப்பிட்டி
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கிளைத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A NOBLE SOUL

*" Lives of Great men all remind us*
*We can make our Life Sublime*
*And departing leave behind us*
*Footprints on the sands of time":*

**Long Fellow**

Mr. V. Nadarajah is one of such great men whose loss to mankind though at the age of eighty leaves a vacuum for many years to come.

He will be always remembered by his associates for his large heartedness and kindness to all known and unknown.

My association with him started while I was in the General Clerical Service joining the Department of Education in 1945, when Mr. Nadarajah has taken up the appointment of Inspector of Schools, a designation today has made it's disappearance with no equivalent to it.

With his abundance of independent thinking, he, without giving much strain to the income of his parents and due to an attraction the General Clerical Service that lead up to the Civil Service now called the Sri Lanka Administrative Service had, joined the Department of Education after a highly Competitive Examination.

While working in the Department of Education he obtained a Bachelor's Degree in Arts of the University of London.

His administrative capacity, efficiency, a sound knowledge of the administrative Rules and Regulations, after a short period of teacher training, took him to the post of Inspector of Schools. He reached the highest office of the Director of Education before retirement.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

His nobleness and kindness has to be evidenced by an incident that I had come to know. While he was the District Inspector of Schools he had learnt that a Head master of a School was not true to the marking of the attendance of the pupils. The Headmaster by his astuteness always escaped the inspections held by the Inspector of Schools Mr. Nadarajah lead up a team and nested the Head master. The noble soul was he, he took into the consideration of the number of years of service and the family burden and imposed a detterent punishment by a demotion as Assistant Teacher in a school nearby.

His life after retirement was more religious with a Saibaba Faiht.

May His Soul rest in peace.

OAM SHANTHI ! SHANTHI ! SHANTHI !

**R. RUDRA** *B. Sc. (Lond.)*
Advocate
Attorney-at-Law
Commissioner for Oaths.

KARAVEDDY
10.01-1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

குடவத்தை விநாயகர்

# ஆலய தர்மகர்த்தா சபை

ஒய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் அமரர் வே. நடராசர் அவர்கள் மேற்படி ஆலயத்தின் 1994ம், 1995ம் ஆண்டின் மகாசபைத் தலைவராகவும் தர்மகர்த்தா சபை இயக்குநராகவும் ஆற்றிய பணிகள் அளப்பரியன.

தனது அறிவு, அனுபவம், செல்வாக்கு என்பவற்றை முழுமையாகப் பங்களித்து ஆலயத்தின் மகத்தான வளர்ச்சிக்கு அவர் செய்த தொண்டுகளுக்கு எல்லை வகுக்க முடியாது. இறைவன் பணி செய்வது, பக்திபூர்வமாக இம்மியளவும் தவறில்லாததாக இருக்க வேண்டுமென்பதை முழுமையாக உணர்ந்து நடந்தவர் இவர். இவ்வாலயத்தின் வெளி மண்டபம் கட்டப்பட்டு முழுமையாக பூர்த்தி அடையும் காலம் சிவபதமடைந்து விட்டார்.

ஆலய மகாகும்பாபிஷேகம் செய்வதற்கு வெளி நாடுகளில் உள்ள அங்கத்தவர்களுக்கு அறிவித்தல் மூலம் தர்மகர்த்தா சபையினரைக்கொண்டு நடைமுறைப்படுத்தி ரூ. 60,000/- வரை கிடைக்க இவரே மூலகர்த்தாவாக இருந்தார். இவ்வாலயத்திற்கு இவர் செய்த பணிக்கு நிகராக எவரது பணியும் இல்லையென போற்றி இறையருள் பெற்று இன்னடிப்பேறமை நாம் விநாயகப் பெருமானடிகளை இறைஞ்சுகிறோம்.

செ. சுப்பிரமணியம்
[தலைவர்]

துன்னாலை தெற்கு,
கரவெட்டி.
9 - 1 - 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# வே. நடராசாவின் குணாதிசயங்கள்

அமரர் திருவாளர் வே. நடராசா B. A. அவர்கள் ஓர் அறிஞர். மிகச் சிறந்த குணசாலி. அறிவுக்கேற்ற அடக்கம், பொறுமை முதலிய நற்குணங்கள் இயல்பாகவே அமைந்தவர். தன்னுயிர்போல் மற்றோரையும் மதித்து நடப்பவர்.

அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும் மலர்ந்த முகமுமுடைய இவர் பெரியவர் சிறியவர் என்ற பேதமின்றி பண்பாகவே நடந்து கொள்வார். தம்மை நாடி வந்த கீழ் உத்தியோகத்தருக்கும் ஊரவர்களுக்கும் அவர் இன்னல்களை களைந்து இன்முகத்தோடு அனுப்புவார்.

அறிவு, ஆற்றல், செல்வம், செல்வாக்கு முதலியன உடையவராயிருந்தும் ஆடம்பரமற்ற சாதாரண வாழ்க்கையே நடத்தி வந்தார். உலக வாழ்வில் பயனில்லை என்று தெரிந்தே அவ்வாறு ஆடம்பரமற்ற வாழ்வை நடத்தினார் போலும். அவர் அந்திய காலத்தில் பாயில் கிடக்காமல் இறைவன் திருவடியை அடைந்தார். அவரின் பிரிவு அவர் சுற்றத்தவர்களுக்கும், ஊரவர்களுக்கும் நண்பர்களுக்கும் மிகத் துன்பத்தைத் தருவதாகும்.

அவரின் ஆன்மா சாந்தியடையுமாறு இறைவனை மன மொழிகளால் வேண்டுவோமாக.

இறைவா! உள்ளத்தில் உன்திருவடி உரையில்
உன் நாமம்.

இ. சிவபாதம்
[ஓய்வுபெற்ற ஆசிரியர்]

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
12 - 01 - 97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தற் பிரதிக்கு தலைமுழுக்கு

எனது நண்பர் திருவாளர் நடராசாவை எனது நல்ல நண்பன் என்று பலருக்குத் தெரியாது என்பதை நான் அறிவேன். இதனை தம்பி தேவராசன் அறியாததும், பலர் புன்முறுவல் பூத்துத் தலை அசைத்து ஒப்புக் கொள்ளவும் கூடியன. கடவத்தைக் காலத்திலிருந்தே சுயமுயற்சியால் துலங்கி வரும் ஓர் எழுத்தர் என்று மட்டும் அறிந்து கொண்டேன்.

மட்டக்களப்புக்கு 49ல் மாறிச் சென்றபோது நடராசர் வித்தியாதரிசியாகித் (Inspector of Schools) திருகோணமலை பிரதேசத்தை தென்னைமரவாடிவரையும் தீரத் தெரிந்து கொண்டு எனக்கு விளக்கலானார். அதனால் எனக்கு ஈச்சிலம்பற்றை, கட்டை பறித்தான், கிளிவெட்டி ஆகிய இடங்கள் வாலாயமாயின. மூதூரில் நின்ற புராதனம் வாய்ந்த 'றொபேட் நொக்ஸ்' புளிய மரமும் அகக் கண்ணில் தோன்றிற்று.

இது நிற்க, கந்தோர் வேலையில் நடராசருக்கு அவரே ஓர் எடுத்துக் காட்டு, எவற்றிலும் குறை காண முடியாது. சில வேளைகளில் இப்படிக் குறைகுற்றம் காணும் குணம் மற்றவர் சிலரில் ஐயம் உண்டாக்கவும் செய்துவிடுகிறது. ஒரு முறை இந்தியப் பெண் ஒருவர், சென்னைப் பல்கலைக் கழக விஞ்ஞான மாணிப் பட்டம் பெற்றவர் என்று தமது சான்றுதல்களுடன் அலுவலகத்தில் தோன்றினார். நடராசர் சான்றுப் பத்திரத்தை ஆராய்ந்தார். பல கேள்விகள் கேட்ட அவர் திருப்திப்படவில்லை. சான்றுப் பத்திரத்தை சரி பார்க்கும் நானும் சிறிசேன் என்ற சிங்கள நண்பரும் குற்றமற்ற சான்றிதழ் என்று நிரூபிக்கவும் நடரார்சர் மறுத்தார். பின் கொழும்புக் கந்தோரிலிருந்து ஏற்க கூடியதென்று மறுமொழி வந்த பின்னே ஒப்புக் கொண்டார்.

துன்னாலை மக்கள் பொதுவாக ஒரு தனித்துவம் பெற்ற குழுவினர் இவர்களை இனம் கண்டு கொள்ளலும் இலேசர்கும். நடராசரின் நல் மச்சான் 1930 வரையில் இருபாலையில் எங்கள் இன பந்துக்களுள் பெண் எடுத்தவர். ஒரு பிரபல சட்டத்தரணி, கோப்பாய் கிராம சபைத் தலைவராகவும் கடமை ஆற்றியவர். எதிர்ப்புகள் பல இருந்தும் அஞ்சாது உட்புகுந்து விடை கண்டு மீள்பவர். நடராசர் இலேசில் இடம் கொடுக்க மாட்டார். மற்றவர் பிழை என அறிந்து கொண்டால் அதனை ஆணித்தரமாக அழுத்தி விடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை தலைமைக் காரியாலய கேள்விகளுக்கு மறுமொழி அனுப்பாது மறதியாக எங்கள் பெரியவர் இருந்துவிட்டு, வித்தியாதரிசிகளின் மேல் பிழை செலுத்தி அவர்களை ஞாபகப்படுத்து முகமாக கடிதங்கள் எழுதி விட்டு ஒவ்வொன்றுக்கும் அறிவித்தல் பிரதி மேலதிகமாக அச்சிட்டு கையொப்பமிட்டு கொழும்பு தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பி விட்டார். திருவாளர்கள் நடராசாவுக்கும் இமானுவேலுக்கும் பிரதிகள் கந்தோரிலேயே வழங்கப்பட்டன. மூலத் திருமுகம் கொழும்புக்குப் போய்விட்டது. அடுத்த நாள் நடராசாவும் இம்மானுவேலும் தாங்கள் ஏற்கனவே அனுப்பிய மறுமொழி கடிதங்களின் பிரதிகள் ஒவ்வொன்றுடனும் அதே கோப்பு எண்ணுடன் கொண்டு வந்து பெரியவருக்கு சமர்ப்பித்து அந்தப் பிரதிகளில் கொடுத்திருந்த விடைகளையும் மேலும் ஒரு முறை கல்விப் பணிப்பாளர் அறியும்படி கொழும்புக்கு அனுப்பக்கூறி பயமுறுத்தவும் செய்தனர். பெரியவர் தன் பிழையை அப்போது தான் உணர்ந்தார். என்னைக் கூப்பிட்டு இந்த இரண்டு பேரின் ***Information Copy To Director*** என்ற பிரதிகளை வாபஸ் பண்ணும்படி தயவாகக் கேட்கச் சொன்னார். அதற்கு நான் இம்மானுவேலிடம் சொல்லி அதை வாபஸ் பெறப் பண்ணுவேன். ஆனால் நடராசரைக் கொண்டு செய்விக்கமுடியாதென மறுத்து விட்டேன். பிறகு பெரியவர் மன்னிப்பு கேட்டவரென அறிந்தேன்.

நண்பர் நடராசரைப் போன்று பலர் தோன்றுவாராயின் ''இப் பூமி சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு'' என்று கூறி நாமும் வழிகாட்டிகளாகப் பதவி ஏற்றம் பெறலாம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**அ. வி. மயில்வாகனம்**

ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளரும்,
அரச கரும மொழிகள் உதவி கமிஷனரும்.

கோப்பாய்
10-01-97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியுலகின் அறுமுகன்

மனிதனது வாழ்நாள் ஒரு நூற்றாண்டு எனக் கூறுவர். அதில் ஐந்தில் நான்கு பகுதியை இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்தவர் துன்னாலை தெற்கு, கரவெட்டியைச் சேர்ந்த அமரர் திரு. வேலுப்பிள்ளை நடராசா அவர்கள். அவர் மறைந்த போதிலும் அன்னாரது மறைவின் முப்பத்தோராம் நாள் அஞ்சலி தினத்திலன்று அவரை நினைவு கூர்வது பொருத்தமாகும்.

நான் மாணவனாக இருந்த பொழுதே அமரர் திரு. வே. நடராசா அறிமுகமானார். எனது தந்தையாரிடத்தில் அவரும் அவரின் மூத்த மருமகன் திரு. கா. கணபதிப்பிள்ளை அவர்களும் உறுதிகள் எழுதுவதற்காக ஒற்றை மாட்டு வண்டியில் வருவது பசுமரத்தாணி போல் எனது உள்ளத்தில் பதிந்துள்ளது. அக்காலத்தில் அவர்களோடு உரையாடாத போதிலும் அவர்கள் தோற்றங்களை மறக்க முடியவில்லை.

அமரர் அவர்கள் 1936ம் ஆண்டு கல்விச் சேவையிற் புகுந்து ஆசிரியராகக் கடமையாற்றினார். பின்பு கல்வித் திணைக்களத்தில் எழுதுவினைஞராக 1944ம் ஆண்டு வரை பணி புரிந்தார். அதே ஆண்டிலிருந்து பாடசாலைப் பரிசோதகராகப் பதவி உயர்வு பெற்று நுவரெலியாவில் சேவையாற்றினார். அவரின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியன உள்ளடக்கிய சேவை காரணமாகவும் கல்வியமைச்சின் நன்மதிப்பைப் பெற்றதனாலும் கல்வி அதிகாரியாகவும் பிரதம கல்வி அதிகாரியாகவும் ஈற்றில் கல்வி அமைச்சில் கல்விப் பணிப்பாளராகவும் பதவி உயர்வுகளைப் படிப்படியே பெற்று இளைப்பாறினார்.

தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப்படும்.

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க அவர் புத்திரர்கள் இருவரையும் புத்திரிகள் மூவரையும் தன் மரபு விளங்க விட்டு மறைந்துள்ளார். இவர்களுடைய அறிவும் ஒழுக்கமும் கண்டோர் இவர்கள் தந்தை இவர்களைப் பெறுவதற்கு என்ன தவம் செய்தானோ என்று கூறும்படி வாழ்கின்றனர். இவருக்கு மருமகன் திரு. கா. கணபதிப்பிள்ளை தற்பொழுது கொழும்பு மாவட்டப் பிரதம நீதிபதியாக இருப்பது பெருமைக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் துன்னாலையிலிருந்து பருத்தித்துறைக்கு பெரும் பாலும் நடந்து [நட – ராசா] வருகின்ற வழக்கமுடையவர். வெய்யிலிலும் குடையுமில்லாது சென்று தனது கடமைகளை நிறைவேற்றுவார். நம்மவருக்கும் பிறருக்கும் சேவையில் இருந்த போதும் ஓய்வுபெற்ற பின்பும் உதவிகள் புரிந்த பெருமகன் திடீரெனக் காலமானது எல்லோருக்கும் அதிர்ச்சியையும் துன் பத்தையும் கவலைகளையும் தருகின்ற நிகழ்ச்சியாகும்.

நெருந லுளனொருவ னில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு

என்ற குறளின் பொருளை நினைந்து ஆறுதலடைவோமாக.

கல்வி உலகில் அறுமுகனாக மிளிர்ந்த அவரின் ஆன்மா சாந்தி அடையப் பிரார்த்திப்போமாக.

**சே. ஏகாம்பரநாதன்**
முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர்.
வடமராட்சிக் கல்விக் கோட்டம்.

10 - 01 - 97



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் வாழ்வின் நினைவுகள்

முன்னைப் புகழ்கொண்ட பெருங்குடி மரபினர் வாழ்பதி, துன்னைம்பதி. இந்நிலத்தினில் இரு மரபும் பெருமை திகழ் வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினர் இல்லறம் நல்லறமென இயற்றி இறையடி பராவி, நோன்புகள் பூண்டு வாழ்ந்த தவப்பேறாக வந்து பிறந்த தவப்புதல்வன் நடராசா ஆகும். பிறந்த நாள்: 1916 – 11 – 10 ஆகும்.

உரிய வயதடைந்ததும் துன்னாலை மேற்கு மெ. மி பாடசாலையில் ஆரம்பக் கல்வி கற்றார். பின்னர் இரத்தின புரி பர்குசன் பாடசாலை, குருநாகல் சென். ஆன்ஸ் கல்லூரி, நெல்லியடி திரு இருதயக்கல்லூரி, கண்டி திரித்துவக் கல்லூரி, ஹாட்லிக் கல்லூரிகளிலும் இடைநிலைக் கல்வி கற்றார்.

1933 ம் ஆண்டு கேம்பிறிஜ் சீனியர் பரீட்சையில் இரசாயனவியலில் விசேட சித்தியும் ஐந்து பாடங்களில் திறமைச் சித்தியும் பெற்று தேறினார்.

1935 ம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழக கல்லூரியிற் சேர்ந்து, லண்டன் இன்ரர் ஆட்ஸ் பரீட்சையில் 1937 ல் சித்தியடைந்தார்.

1939 ல் லண்டன் பல்கலைக்கழக கலைப் பட்டதாரியானார். தூயகணிதம், லத்தின், தருக்கம் ஆகிய பாடங்களில் தேர்வு பெற்றார்.

1954 ம் ஆண்டு கல்வி டிப்ளோமா பரீட்சையில் தேறினார்.

## அமரர்தம் சேவை விபரம்

இவர் 1936 ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் எழுதுவினைஞர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு ஏழு வருடங்கள் கல்வி அமைச்சு, யாழ். கல்வித் திணைக்களம் ஆகியவற்றில் கடமை புரிந்தார்.

1944 ம் ஆண்டு கல்விச் சேவையில் உதவி ஆசிரியராக கடவத்தை ஆங்கில பாடசாலையிலும், யா/ஸ்ரான்லி மகா வித்தியாலயத்திலும் பணி புரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1945* தொடக்கம் *1963* வரை பாடசாலை பரிசோதக ராக நுவரெலியா, திருகோணமலை, கண்டி, பருத்தித்துறை, கம்பளை, மாத்தளை, சாவகச்சேரி, யாழ். கல்வித் திணைக்க ளம் ஆகிய இடங்களில் பணி புரிந்தார்.

*1964* தொடக்கம் *1967* வரை யாழ்., மன்னார் கல்வித் திணைக்களங்களில் மாவட்ட பாடசாலை பரிசோதகராக பணி புரிந்தார்.

*1968* முதல் *1970* வரை பிரதம கல்வி அதிகாரியாக மன்னார், வவுனியா மாவட்டங்களில் கடமை புரிந்தார். *1971* ஜனவரி மாதத்தில் கல்விப் பணிப்பாளராக பதவி உயர் பெற்று கல்வி அமைச்சில் *1972* மார்ச் *1* ந் திகதி சேவையிலி ருந்து ஓய்வுபெறும்வரை பணி புரிந்தார்.

ஓய்வுபெற்ற பின், அரசாங்கம் பொறுப்பேற்ற முகாமை யாளர் பாடசாலைகளில் இருந்த பிணக்குகளைத் தீர்க்க விசா ரணையாளராக *[Arbitrator]* கல்வி அமைச்சினால் நியமிக்கப் பட்டு திறம்படச் சேவையாற்றினார்.

*I C M A* மாணவர்களுக்கு *Statistics* [புள்ளிவியல்] பாடத்தை தனியார் கல்வி நிலையத்தில் கற்பித்தார்.

பின்னைய காலத்தில் குடவத்தை பிள்ளையார் கோவில் மகாசபைத் தலைவராக இருந்து தொண்டாற்றினார். பொழுது போக்காக சொந்த நில புலங்களைக் கவனித்துக்கொண்டிருந் தார்.

## வாழ்வு நலம்

*1946* ஆம் ஆண்டு யூன் *1* ந் திகதி தன்னில்லறத் துணைவியாக குணநலம் மதிநலம் வல்ல முருகேசர் மகாரத் தினம் பொன்னம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திரி மங்கை யர்க்கரசியை ஏற்று தன் அரசுப் பணியுடன் இல்லறப் பணி யையும் செவ்வனே தொடர்ந்தார்.

கைதொழுதேத்தும் பிள்ளையார், வைரவர், மாயவன், பேரருள் சுரக்கப் பிள்ளைகள் ஐவரைப் பெற்றெடுத்துப் பெயர் விளங்கு புகழாளர் ஆக்க ஆவன செய்தார்.

மக்களுக்கேற்ற மணமக்களை தமதுள்ளம் மகிழத் தேர்ந் தெடுத்து வாழ்வுச் சிறப்பைக் காணவைத்தார். அன்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணைப்போடு, அரிய மழலைச் செல்வத்தோடு பேரோடு புகழோடு மக்கள்; மருமக்கள் வாழ்வது கண்டு பூரித்தார்.

இறையடி தொழுதல், இனிய சுற்றத்தவரோடு இணைந்து ஆவன செய்தல், மக்கள், மருமக்கள்' பேரப்பிள்ளைகள் நலம் பேணுதல் என்று இயங்கிக்கொண்டே வாழ்ந்தார். யாழ். மருத்துவ மனையில் அரன் தன் பாதம் அடைந்தார். அவரது குடும்பத்தினர், அவரது கல்விச் சேவைக் குடும்பம்," நட்பினர், அயலவர் பலரும் கதற, படைத்தவன் பாத நிழல் பெற்றுயர்ந் தான்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்னையம்பதி வாசரும்,
உயர்தவச் சைவ நன்னெறியினருமான

**அமரர் வேலுப்பிள்ளை - நடராசா**
**(ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்)**
*அவர்களின் பிரிவு குறித்த*

# இரங்கற்பாக்கள்

## நிதி வெண்பா

ஆண்டாகுந் தாதுமதி மார்கழியைச் சார்பூர்வத்
தீண்டு சதுர்த்தசியே எம்மன்புட பூண்டமதன்
மன்நடரா சன்சிவனார் மாணடியைப் பெற்றுய்யத்
தன்னுடலை விட்ட கன்றார் பார்.

## மனைவி மங்கையர்க்கரசி

பொன்னணியைத் தந்தன்பு மனைவி யாக்கி
பொறுப்பறியாக் குழந்தையெனப் பேணி னீர்கள்
எந்நலமும் பார்க்காது மனைவி மக்கள்
ஏற்றமொன்றே வாழ்வென்று ஆசைப்பட்டீர்
இன்னவிதம் வளர்த்திட்ட நீங்கள் இன்று
இடிவிழுந்த துயரமென ஆக்கி விட்டே
பொன்னடியாம் பரனடியைக் காணப் போனீர்
பொழுதெல்லாம் கண்ணீரே படைக்கி றேனே

## மகன் தேவராசன் *(பொறியியலாளர்)*

சீரார்பல் கலைக்கழகப் படிப்பும் காட்டித்
சிறந்தபொறி யியலாளர் ஏற்றம் தந்தீர்
ஆராத அன்புமனை யாளைத் தந்து
அனைத்திலுமே பொறுப்பேற்று வளர்த்த அப்பா
வாராத நோய்தீர்க்கக் கொண்டு போயும்
வெற்றுடலாய்க் கொண்டுவர நேர்ந்தபோது
சோராத கண்ணீரே சொரிந்து வெம்பித்
துடிக்கின்றேன் துயராற வழிகா ணேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் மகேந்திரன் (கணக்காளர்)

பொறுப்பறியா எனைக்கல்வி கற்க வைத்து
புகழ்நிலைக்கே ஆக்கியிங்கே கடமை தன்னை
சிறப்புடனே செய்யவைத்தீர் சிறுநோய் தானும்
தாங்கானே எனஓடி வந்து சேர்வீர்
அறப்பணிக்கே இனியதுணை தேடி வைத்தும்
அக்காட்சி காணுமுன்னம் நடந்தீர் அப்பா
புறப்பட்டு ஊர்வந்து பார்த்த என்னைப்
பெய்மழையாய்க் கண்ணிறைக்க வைத்தேன்
போனீர்.

## மகள் தேவராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை)

அடிக்கொருக்கால் ராணிஎன்றே அழைக்கும் அப்பா
ஆசிரியப் பணிசெய்யும் நிலையும் ஆக்கி
நொடிப்பொழுதும் தவறாது நீதி காக்கும்
நல்லவரை என்கணவர் ஆக்கி னீர்கள்
துடித்தோடி அருகிருந்து கடமை செய்தும்
தாங்கரிய துயர்க்காகிக் கலங்க விட்டீர்
வெடிப்பான தேஇதயம் வெம்பி வெம்பி
வேகின்றேன் ஆறவழி தெரியேன் அப்பா.

## மகள் மகேஸ்வரி (ஆசிரியை)

தங்கையின் பெயரிட்டு கல்விபயிற்றுவித்து ஆசிரியராக்குவித்தீர்
அயராத முயற்சியினால் தக்கதோர் மணவாளனையும்
சேர்த்துவைத்தீர்
நான் செய்கின்ற பிழையெல்லாம் பொறுத்து
அடுத்த கணம் ரஞ்சி என அழைப்பீரே
தீ பட்ட காயம் சிறிதேயென எவரும் கூற
உடல்தேறி விரைவில் வீடு வந்திடுவீர் என இருந்தோம்
கையெடுத்த தெய்வங்களும் எம்மைக் கைவிட்டு விட்டனவே
அம்மாவும் நாமும் இனி யாரைநம்பி வாழ்ந்திடுவோம்

## மகள் சந்திரமதி

வாயினிக்கச் சாந்தியென்று அழைக்கும் அப்பா
வாஞ்சையுடன் வளர்த்தெனக்குக் கல்வி ஊட்டி
தூயமனை புதிதமைத்து திருமணத்தைச்
சிறப்புறவே செய்யவைத்து மகிழ்வு கண்டீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயதனைத் தீர்த்திடவே துடித்து நின்றும்
நாம்செய்த தவக்குறைவோ இழந்து விட்டோம்.
பாய்கிறதே கண்ணீர்என் நெஞ்சும் நூறாய்ப்
பிளக்கிறதே ஆறவழி புரியேன் அப்பா.

**மருமகன் கணபதிப்பிள்ளை** (*மாவட்டநீதிபதி*)

உடன்பிறந்தாள் மகனென்ற பாசத்தாலே
உதவிபல செய்துயர்ந்த நிலமைக் காக்கி
அடங்கரிய ஆசைமகள் தன்னை என்தன்
அன்புமனை யாளாக்கி விட்ட மாமா
உடனிருந்து நோய்மாற்றப் பாடு பட்டும்
உயிரகன்ற உடல்கொண்டு வந்தேன் நெஞ்சம்
படுத்துயரம் சொற்களிலே அடங்கு மாமோ
பரனடியிற் பேரமைதி பெறுக சாந்தி.

**மருமகள் தங்கரத்தினம் (B. A. - *அமெரிக்கா*)**

பெற்றெடுத்த பிள்ளையெனப் பேணி வேண்டும்
புத்தகமோ உடைவேறு எவைவோ எல்லாம்
பற்றுமிகும் மாமாநீர் தந்து கல்விப்
பேற்றிணையும் வழங்கியுயர் வெய்த வைத்தீர்
சுற்றமயல் துறந்திங்கே வந்த போதும்
திருவுருமை மறந்தறியேன் சேதி வந்தே
உற்றபொழு துணர்வுகெட்டேன் மாமா சோகம்
உயிரிருக்கும் வரைமறையா தென்செய் வேனே.

**மருமகள் பாலாம்பிகை**

அன்புசொரி மாமாவே என்னை யுங்கள்
அரிய மகள் போற்பேணிக் காத்தீர் ஏதும்
துன்பமென கேட்டாலே துடித்து வந்து
துணை நின்ற செயல்களையே எண்ணி இன்றும்
என் பிரிய மாமாவே இருக்கின் றேனே
எதிர்பாரா மரணத்தாற் கலங்கி விட்டேன்
முன்புரிந்த தவக்குறைவோ இந்த வாறு
மாமாவே இழந்து விட்டேன் மாய்கிறேனே.

**மருமகள் தங்கலட்சுமி**

வீட்டுக்கு முதல் வந்த மருகி என்றே
விருப்பு மிகக் காட்டிய என் அன்பு மாமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டிட வாய் எடுக்குமுன்னம் இந்தா என்று
கரிசனையாய் நடந்தவைகள் எண்ணி எண்ணி
வாட்டுதுயர்க் காளாகி வருந்துகினறேன்
வாஞ்சையுடனை பேசிய வாய் மூடிற் றாமே
மோட் டெருமை மாட்ட மருய் யமனார் கொல்ல
வேறொருவர் கிடைத்திலதோ வெதும்பி னோனே.

**மருமகன் லட்சுமிகாந்தன்**

பாசமிகும் மாமாவே பொறுமை அன்பு
படைத்தவரே எவரிடத்தும் உங்கள் நெஞ்சப்
பாசமதைக் காட்டுவீரே என்னை ஆசை
மகனென்று தான்பழகிக் கொண்டீர். வார்த்தை
பேசுவதோ மிகக்குறைவு நோயென்றாலே
பைசிக்கில் தனிலேறிப் போவோ மன்றோ
நாசமென இறப்படைய நெஞ்சம் தேம்பி
நலிகின்றேன் மாமாவே பெறுக சாந்தி.

**மருமகள் பார்வதிதேவி**

உங்களது விருப்புடனே கொழும்பு வந்தேன்
ஊரிலுங்கள் நிலைமையதை எண்ணி நின்றேன்
இங்கெனக்கே இப்படி ஓர் இழவுச் சேதி
ஏற்படுமென் றெண்ணவில்லை சேதி கேட்டு
பொங்கு துயர்க் காளாகிப் புலம்பு கின்றேன்
அங்கு வந்தால் ஆசைமுகம் காண லாமோ
அழுதழுது கரைய வழி ஆயிற் றையோ

**மருமகன் தில்லைநாதன்**

மாதமொன்று இங்கிருந்த வேளை தெய்வ
மலரடிகள் காண வென்றே அலைந்து நின்றீர்
வேதனையை வெளிக்காட்டா தேடி யாடி
வளர்த்தவளின் பயணித்துக் காண எல்லாம்
பாதமவை வலிக்க நடந் திட்டீர் இன்று
பரிதவிக்க விட்டேனோ போய் விட்டீர்கள்
வேதனையால் வெம்பிமனம் வாடு கின்றேன்.
வணங்கிய அத் தெய்வபதம் பெறுக சாந்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேரன் கேதீஸ்வரன்**

வன்னமடி தோல் நெஞ்சு கையில் எல்லாம்
வைத் தாட்டி வளர்த் தெடுத்த கோயில் என்னை
என்னடிஎன் முத்தேவா என்ற ழைக்க
இந்நிலத்தே உருவாக்கி னீர்கள். நானும்
என்னுடைய வாகனத்தில் இருத்தி எங்கும்
இரவு பகல் கொண்டு சென்ற தென்னா தந்த
பின்னமிலா இறையடிக்கோ ஓடி னீர்கள்
பெற்றமைக சாந்தியரன் பாதப் பேறே.

**பேரன் நிரஞ்ஜன்**

ஐயோ! ஐயோ! அம்மப்பா!
அப்பாவும் அம்மாவும் வீட்டில் இல்லாத நேரத்தில்
குறும்பாய் குளப்படிகள் செய்தாலும் பிரம்படி தராமலே
பகிடியாகக் கண்டித்து சிறந்த முறையில்
கல்வியையும் நல்ல கதைகளையும் போதித்த
சிறந்தகல்விமானான. நல்லஅம்மப்பா! சொந்தஅம்மப்பா!
எங்களம்மப்பா! எங்கு நீர் சென்றீர்
கட்டிலிலுமில்லை கதிரையிலுமில்லை
அங்கும் காணோம் இங்கும் காணோம்
எங்கும் காணோம் அம்மப்பா!

உத்தியோக பூர்வ நாவிதன் என்று
செல்லமாக அழைக்கும் அந்தக் குரலைக் காணோம்.
அந்தக் குரலையுடைய வாயை அணிகலனாகக் கொண்ட
உடலைக் காணோம்.
கொழும்பு வரும் கடிதங்களில் நிறஞ்ஜன் அறிவது என்றும்
எதிராகவும் பகிடியாகவும் எழுதும்
கடிதங்களைக் காணோம்.
அந்த அழகிய உறுதியான முத்தான எழுத்தை இனி
எங்கு காணப் போகின்றோம். அந்த எழுத்தையுடைய
உறுதியான அம்மப்பாவை எங்கு காணப்போகிறோம்.
இனியும் சுணக்க மென்ன எங்கள் இளைப்பாறிய D.E.
அம்மப்பாவே! அடுத்த பிறவியிலும் எம்முள்
ஒருவராய் பிறந்து சிறப்பிக்க
எமது குடும்பத்திற்கு விரைவாய் வருக! சாந்தி பெறுக!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேரன் கேசவன்**

தூக்கியெடுத்தே கன்னம் உச்சி என்று
தினம் கொஞ்சி வளர்த்தவரே. அப்பப் பாவே
காக்குமொரு கடவுளென நம்பி நின்றோம்
கருணைவடி வானவுங்கள் நோயே மாறப்
பார்க்கஇருந் தோம் மறைந்த சேதியாலே
பெரும்துயரம் பெற்றேனே மனமதிர்ந்து
வீக்கமெடுத் தழுகின்றேன் வேறென் செய்வேன்
விண்ணமரும் தெய்வ பதம் பெறுக சாந்தி.

**பெறாமக்கள்**

தங்களரும் மக்கல்லத் தானால் பெற்றெடுத்த
தங்க மக்கள் என்றே துணை செய்தீர் - இங்கழுது
வேகின்றோம் உள்ளம் வெடிக்கின்றோம் துன்பமிது
போகின்ற பாதை யெதப்பா.

**மறு மருமக்கள்**

செல்வம் பெருமைவரத் தம்மவரை யார் மதித்தார்
நல்லன் நம் மாமாவே எம்மையுங்கள் - நல்லிதயம்
ஏற்றுமகிழ்ந்ததே எங்கோடிப் போய்விட்டீர்
ஆற்றும் துயரோ இது.

**சுற்றத்தவர் அயலோர்**

கொடுக்கப் பிறந்த குணமகன் மன்நடராசா அன்பன்
அடுத்து வந்தோர்க்கே அவர்கதை கேட்டே உதவியவன்
துடிக்கவிட் டோடிப் பறந்தார் இது துயர் தாங்கரிது
வெடித்துச் சிதறிடும் உள்ளம் எரிந்தே வெதும்பினமே
புல்லே நசிய நடந்தறியாத புனித மகன்
வல்லோன் எவர்க்கும் எதுவும் புரிய விரைபவர்க்காய்
கல்லே மனமெனக் கொண்டவர் கூட கதறுவாரே
நில்லா தகன்ற நெறியா லுலகினர் நைந்தனமே.


## தேற்றம்

பொய்யுடலை மெய்யென்று பேரிட்டழைக்கின்றோம்.
மெய் பொய்யாய்ப் போனாற் கவலையேன் - ஐயன்
நடராசன் தில்லை நடராசன் பார்தம்
கடிதேகி னான் துயரம் ஏன்? **- கருணாகரன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

எங்கள்
குடும்ப ஒளிவிளக்கு
திரு. வே நடராசா
(ஓய்வு பெற்ற கல்விப் பணிப்பாளர்)
அமரத்துவமடைந்த நாட் கிரியைகளிற்
கலந்து சிறப்பித்தோர், துக்கம் பகிர்ந்தோர்,
துணை நின்றுதவியோர், யாழ். கட்டிடத்
திணைக்கள அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள்,
நோயுற்றபோது, விசேஷமாகக் கவனித்த டாக்டர்.
கு. மகேசன் அவர்களுக்கும், சகல உதவிகளும் புரிந்த
மந்திகை ஆஸ்பத்திரி விடுதி இல. 7, மற்றும் யாழ்.
ஆஸ்பத்திரி விடுதி இல. 27 டாக்டர்கள்,
தாதியர், சிற்றூழியர்களுக்கும்
எம் இதய நன்றிகள்
உரித்தாகுக.



துன்னாலை,
கரவெட்டி.
22-01-97

மனைவி, மக்கள், மருமக்கள்

போஸ்கோ இல. 3, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org